# உடைந்த உள்ளங்களுக்கு இயேசுவின் சமாதானம்

வருடம் 12 பிப்ரவரி 2014 மாதம் 8

## கோவை

## இயேசுவின் சமாதானம் புத்தாண்டு பரவசப் பெருவிழா



“Lord will give you The Desire of your Heart” Psalms 37 : 4

# JESUS REDEEMS

Nalumavadi - 628 211, Thoothukudi Dt. Tamilnadu, India


Mohan C. Lazarus

Date : 20.01.2014

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர் ஏ.எஸ்.வி. ராபின் அவர்களுக்கு

அதியசங்களின் தேவனாம் இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில், என் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்! **என் இயேசு** என்ற பாடல் ஆடியோ சிடி கிடைக்கப்பெற்றேன். கர்த்தர் உங்கள் மகனுக்கு (ராஜ்லின்ட்) கொடுத்திருக்கிற தாலந்துகளுக்காக அவரைத் துதிக்கிறேன். தொடர்ந்து தேவனாகிய கர்த்தர் தாமே மகனோடிருந்து ஊழியத்தின் பாதையில் பயன்படுத்துவார்.

தொடர்ந்து உங்களுக்காக, ஊழியங்களுக்காக, குடும்பத்திற்காக நான் தேவசமூகத்தில் அதிகமாக ஜெபிக்கிறேன். கர்த்தர் உங்கள் ஊழியத்தை பெருகப்பண்ணி, ஆசீர்வதிப்பார். ஊழியத்தின் எல்லைகளை விரிவாக்குவார். திரளான ஆத்துமாக்களை தந்தும் ஆசீர்வதிப்பார்.

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்
**மோகன் சி. லாசரஸ்**

## இயேசுவின் சமாதானம் பரவசப் பாடல்கள் - பாகம் 2 **என் இயேசு..**

கர்த்தர் இயேசுவின் கிருபையால் நவீன இசையில்
உருவாகிய உள்ளத்தை இயேசுவிடம் திருப்பும்,
இனிமையான ஆடியோ சிடி
சிடி 2014ம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி
வெளிவந்து விட்டது.






**பாடல். ராகம் & பாடியவர்கள்**

**ராஜ்லின்ட் ராபின்**
**ஏ.எஸ்.வி. ராபின்**

( இசை : ஜி.எம். ஞானகுமார், டிவைன் மெலடிஸ் )

காணிக்கை ரூ.100/-

## இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா...


சகோ. எஸ். சந்தியாகு

கர்த்தர் இயேசுவின் நாமம் மகிமைப்பட்ட
இக்கூட்டம் அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைய,
எங்களோடு தோள் கொடுத்து, ஒத்துழைத்து,
ஜெபித்த அன்பு சகோ. எஸ். சந்தியாகு (டாக்டர்
வி.ஜி.செல்வராஜ் (வி.ஜி.பி.) ஒருங்கிணைப்பாளர்
சென்னை), அன்பு சகோ. சார்லஸ் பிரபாகரன்
(கோவை) அவர்களுக்காக
தேவன் இயேசுவை மகிமைப்படுத்துகிறோம்.

**ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின், ராஜ்லின்ட் ராபின்**


சகோ. சார்லஸ் பிரபாகரன்




**என் அன்பு அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளே!**

**மகிமையின் ராஜா இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.**

இந்த புதிய ஆண்டின் 2வது மாதத்திற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் நமக்கு நிறைய நன்மைகள் செய்ய தேவன் இயேசு ஆவலோடு காத்திருக்கிறார். அவரை மனதார ஸ்தோத்திரித்து நன்மைகளையும், அற்புதங்களையும், ஆசீர்வாதத்தையும் அவரிடமிருந்து பெற்று மகிழ்வோம்.

உங்கள் எல்லோருடைய ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் இயேசுவின் சமதானம் பரவச பெருவிழா ஜனவரி 4,5, தேதிகளில் சிறப்பாய் நடைபெற தேவன் இயேசு கிருபை செய்தார். இந்தியா தேசத்திலிருந்து பல மாநிலங்களிலிருந்தும், தமிழகத்தில் பல பகுதிகளிலிருந்தும் திராளான ஜனங்கள் வந்து, தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டனர். இதற்காக இயேசுவை நன்றியோடு துதித்து மகிமைப்படுத்துகிறேன்.

இயேசுவின் சமாதான ஊழியத்திற்கு தொடர்ந்து உங்கள் அன்பான காணிக்கைகளை அனுப்பி ஏழைகளுக்கும், திக்கற்றோருக்கும், ஊனமுற்றோருக்கும் உதவி செய்து, சுவிஷேசம் அறிவிக்க எங்களுக்கு உதவுமாறு அன்போடும், தாழ்மையோடும் கேட்டுக்கொள்கிறேன்.

தினமும் **1 நிமிடமாவது** எங்களுக்காக, ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.
தேவன் இயேசு நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.



**With Deep Love & Affection With Prayers**

உங்கள் அன்புத் தம்பி / அண்ணன்

இயேசுவின் சமாதானம்
மாத இதழ்

**Final Designing & Editing**

**ராஜ்லின்ட் ராபின்** B.Sc.,Vis.com., (M.B.A.)

Managing Partner, Rajlynt Exports & Imports



**- ஏ.எஸ்.வி. ராபின்.**

# இயேசு உங்களை நேசிக்கிறார்



ஏ.எஸ்.வி.ராபின்

இந்த உலகில் எல்லோரையும் விட, நம்மை அதிகமாய் நேசிப்பவர் இயேசு ஒருவரே. இயேசு நம்மை எவ்வளவு அதிகமாய் நேசித்தார், நேசிக்கிறார் என்பதற்கு ஆதாரம் இது, நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது (உயிரைக் கொடுப்பது) அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்க துணிவான், நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே,தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் (ரோமர் 5:7,8).

## இயேசுவை நேசிப்போம்

என் கற்பனைகளைக் (கட்டளைகளை) கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.(யோவன் 15.10). தேவன் இயேசு நமக்கு தரும் அன்பின் கட்டளை என்னவென்றால், இயேசு நம்மிடம் அன்பாய் இருக்கிறது போல நாமும் மற்றவர்களிடம் அன்பாய் இருக்க வேண்டும் (யோவான் 15.12). நாம் இயேசுவை உண்மையாய் நேசிப்பதற்க்கு அடையாளம், பிறரையும் இதுபோலவே நேசிப்பதாகும். நான் இயேசுவை நேசிக்கிறேன் என்று சொல்லி பைபிள் வாசித்து , ஜெபித்து, தேவன் இயேசுவை துதித்து பிறரை நேசிக்காவிட்டால் எல்லாம் வீண். இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழும் நாட்களில் எல்லா மக்களையும் அதிகமாய் நேசித்தார். அவர் எத்தனையோ எதிர்ப்பு, அவமானம், பரியாசத்தை, சகித்து வாழ்ந்தார். உலகத்தை படைத்த தேவன்தான் இயேசு. அவர், தான் உருவாக்கிய மனிதர்களை அதிகமாய் நேசித்ததால் எல்லாவற்றையும் நீடிய பொறுமையோடு தாங்கிக் கொண்டார். தன் அதிகாரத்தை பயன்படுத்தி மனிதர்களை தண்டித்திருக்கலாம். கோபத்தினால் அழிக்கவும் அவரிடம் அதிகாரம் இருந்தது. ஆனால் அவர்களை அழிக்கவில்லை, எத்தனை ஆச்சரியமான அன்பு இயேசுவின் அன்பு! இதுபோல நாமும் இந்த உலகில் வாழும் நாட்களில் நம்மை எதிர்க்கும் மனிதர்களையும் நேசிப்போம். பழி வாங்கும் எண்ணம் நமக்கு வேண்டாம். நாம் இயேசுவின் அன்பை பிறரிடம் வெளிப்படுத்தி அவர்களையும், இயேசுவையும் சந்தோஷப்படுத்துவோம். இயேசுவின் உள்ளம் மகிழும் போது, இந்த உலகிலும் நம்மை கர்த்தர் இயேசு உயர்வாய் வாழ வைப்பார். நாம் மனிதர்களை நேசிப்பது இயேசுவை நேசிப்பதாகும் என்று தேவன் இயேசு கூறுகிறார்.



## இயேசு நம்மை நேசிக்கிறார்

இயேசுவின் அன்பு எல்லாவற்றையும் விட பெரியது. நம் அன்புக்காக மிகவும் அதிகமாக இயேசு ஏங்குகிறார். நீ என்னை நேசிக்கிறாயா? (யோவான் 21.17) என்று மூன்று முறை தன் சீடனாகிய சீமோன் பேதுருவை பார்த்து இயேசு கேட்கிறார். அதற்கு பேதுரு, நான் உம்மை நேசிக்கிறேன் என்று மூன்று முறையும் கூறினார். அப்பொழுது என் ஆடுகளை

ஏ.எஸ்.வி.ராபின்

மேய்ப்பாயாக என்று இயேசு கூறினார். ஆடுகள் என்றால், உலக மக்கள். மேய்ப்பது என்பது உலக மக்களுக்கு தேவாதி தேவன் இயேசுவை பற்றி அறிவித்து முடிவில் அவர்களை பரலோகம் கொண்டு சேர்ப்பதாகும்.

## என்னை நேசிக்கும் இயேசு

தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனை (மகனை) சிட்சிக்கிறது போல, கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை சிட்சிக்கிறார் (கண்டித்து, தண்டித்து திருத்துகிறார்). 20 வருடங்களுக்கு முன்பாக தேவன் இயேசு கோவையில் ஊழியம் செய்யும்படி எங்களை அழைத்தார். என் மனைவி உடனே தேவன் இயேசுவுக்கு கீழ்படிந்து ஊழியம் செய்தாள். ஆனால் நான் சென்னை சென்று, பார்ட்னர்ஷிப் அடிப்படையில் கன்ஸ்டிரக்ஷன் தொழில் செய்ய திட்டமிட்டேன். அன்று இரவு ஒரு கனவு மூலம், நீ அங்கு நீ செல்ல வேண்டாம் மீறி சென்று தொழில் செய்தால், நஷ்டத்தையும், தோல்வியையும், அவமானத்தையும் சந்திக்க நேரிடும் என்று தேவன் இயேசு என்னை எச்சரித்தார். ஆனால் நான் இயேசுவை அசட்டை செய்து சென்னைக்கு சென்று தொழில் செய்தேன். ஆனால் இயேசு சொன்னபடி லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்தையும் தோல்வியையும் ,அவமானத்தையும் சந்தித்தேன், இவ்வாறு என்னை இயேசு சிட்சித்தார். இந்த காலத்தில் நான் இயேசுவை உறுதியாய் பற்றிக் கொண்டேன். பின்பு நான் கோவைக்கு வந்து அவருடைய ஊழித்தையும், தொழிலையும் செய்த போது இயேசு எங்களை ஆசீர்வதித்தார்.

இன்று லட்சக்கணக்கான மக்களை எங்கள் மூலம் ஆசீர்வதித்து உயர்த்தும் இயேசு, உங்களையும் ஆசீர்வதித்து உயர்த்த விரும்புகிறார். அழியப்போகும் உலகத்தை நேசிக்காமல் இயேசுவை அதிகமாய் நேசியுங்கள். அப்பொழுது இயேசு உங்களை நேசிப்பார். உங்களை 1000 மடங்கு ஆசீர்வதித்து உயர்த்துவார்.







கோவை
இயேசுவின் சமாதானம்
பரவசப் பெருவிழாவில்
இயேசு செய்த அற்புதங்களை
குறித்து சாட்சி கொடுத்த
சகோ. ராமராஜன்,
சகோ. ஆனந்த் பாபு
இவர்களின் சாட்சிகளை
யூ டியூபில் **(You Tube)** -ல்






visit our website
*peaceofjesus.org*
(or) *asv robin*




இதன் மூலம் இந்தியா மற்று உலக தேசமெங்கும் இயேசுவின் சமாதானம் ஊழியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையை (E-magazine) வாசிக்கவும், ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் கொடுத்த வீடியோ செய்திகளைப் பார்க்கவும் தேவன் இயேசு கிருபை செய்திருக்கிறார். நீங்கள் இதன்மூலம் இயேசுதரும் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

## கற்றுக்கொள்வோம்

தாழ்மையுள்ளவர்களுக்கு (தேவன் இயேசு) கிருபை அளிக்கிறார்.
(யாக்கோபு 4:6)

# தாழ்மை

- ராஜ்லின்ட் ராபின்



அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து மறைந்த ஆபிரகாம் லிங்கன், ஒருமுறை ஒரு கூட்டத்தில் பேசுவதற்காக மேடையில் அமர்ந்திருந்தார். அவர் அருகே அவர்மேல் பொறமை கொண்ட ஒருவர் அமர்ந்திருந்தார்.

அந்த பொறாமை பிடித்தவர் கூட்டத்தில் பேசும் பொழுது, இங்கு அமர்ந்திருக்கும் செருப்பு வியாபாரி மகன் ஆபிரகாம் லிங்கன் என்று தன் உரையை ஆரம்பித்தார்.

ஆபிரகாம் லிங்கன் உடனே எழுந்து நின்றார். ஜனங்கள் ஆச்சரியத்தோடு என்ன சொல்லப் போகிறார் என்று பார்த்தார்கள். ஒரு நிமிடம் தாமதியுங்கள். நீங்கள் சொல்வது தவறு என்றார். கூடியிருந்த ஜனங்கள் ஏதாவது தகராறு வந்து விடுமோ என்று திடுக்கிட்டு பார்த்தார்கள். சிலநொடிகளுக்குப் பின்பு ஆபிரகாம் லிங்கன் நான் செருப்பு வியாபாரி மகன் அல்ல. செருப்பு தைக்கும் கூலி தொழிலாளியின் மகன் என்று மிகுந்த தாழ்மையோடு கூறினார். இதைகேட்ட மக்களின் உள்ளங்கள் நெகிழ்ந்தன.






அவரை அவமானப்படுத்த நினைத்தவர் உள்ளமும் நெகிழ்ந்தது. அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது. உள்ளத்தில் உள்ள மனத்தாழ்மை தான் ஒரு மனிதனை உயர்த்தும். ஆகவே தாழ்மையோடு வாழ்ந்து இயேசு தரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்.

YouTube

ஏ.எஸ்.வி. ராபின் - பொற்செல்வி ராபின் கொடுத்த தேவ செய்திகளைக் கண்டு தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்
keyword : ASV Robin, Rajlynt Robin, Porchelvi Robin



எங்கள் முகவரி
இயேசுவின் சமாதானம்
393, பேஸ் 2,
ஹவுசிங் யூனிட், சிட்கோ,
கோயம்புத்தூர் – 641 021,
தென் இந்தியா



Our Address
PEACE OF JESUS
393. Phase 2,
Housing Unit, SIDCO,
Coimbatore - 641 021.
S.India

ஜெப உதவி / தொடர்புக்கு : (+91) 9994510610
Email: asvrobin@gmail.com    www.peaceofjesus.org



பெண்கள் பகுதி

# வானம் பூமி

- பொற்செல்வி ராபின்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கே மகிமை

என் பாசத்திற்குரிய சகோதரியே,

இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். தேவன் உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக.

## நினைவுகள் - வழிகள்

என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல என்று கர்த்தர் சொல்கிறார் (ஏசாயா 55:8). பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது என்று ஏசாயா 55:9 வசனத்தில் வாசிக்கிறோம். வானத்தையும், பூமியையும் அண்ட சராசரங்களையும், எல்லா மனிதர்களையும், காற்றையும், கடலையும், உயிரினங்களையும் உண்டாக்கிய தேவன் இயேசுதான் இப்படி கூறுகிறார். நம் வாழ்க்கையை குறித்த திட்டத்தை அவர் வைத்திருக்கிறார். அதை அழகாக நம்மூலம் அவர் நிறைவேற்றுவார்.

## தேவனுடைய கிருபை

பூமியை பார்க்கிலும் வானம் எவ்வளவு உயரமாய் இருக்கிறதோ, அவருக்கு பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும், அவ்வளவு பெரிதாய் இருக்கிறது என்று சங்கீதம் 103 :11 ம் வசனம் கூறுகிறது. தகுதியற்ற நம்மேல் தேவன் இயேசு காட்டும் இரக்கம் தான் கிருபை என்று அழைக்கப்படுகிறது. அவருக்கு பயந்து, அவருடைய கட்டளைகளை கடைபிடித்து நாம் வாழும் போது, இயேசுவின் கிருபையை நாம் அதிகமாக பெற்றுக் கொள்ளலாம். தேவன் இயேசுவை நேசித்து அவரிடம் நெருங்கி உறவாடும் ஜெப வாழ்வை கொண்டவர்களை, அவர் தம் கரங்களில் தாங்குவார், ஏந்துவார், சுமப்பார், தப்புவிப்பார்.

## சூரியன் - நட்சத்திரங்கள்

வானத்தை இரவு நேரம் அண்ணாந்து பாருங்கள்! அழகாய் ஜொலி ஜொலிக்கும் நட்சத்திரங்கள்! இவை. எல்லாம் உங்களை சந்தோஷப்படுத்துவதற்காக! காலையில் சூரியன் உதிக்கும் போதும், அது மாலையில் மறையும் போதும், அதன் அழகை வர்ணிக்க



வார்த்தைகள் போதாதே! நம் தேவன் இயேசு இப்படி உலகத்தை வெளிச்சமாக்கும் விதம் எத்தனை ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஏன் கலங்குகிறீர்கள்? ஏன் கவலைப்படுகிறீர்கள் ?

## பாடும் பறவைகள்

மரங்களில் பறவைகள் அமர்ந்து பாடும் இன்னிசை பாடல்கள் உங்களை மகிழ்விக்கத்தான்.



கூட்டம் கூட்டமாய் பறக்கும் பறவைகளை பாருங்கள். இவையெல்லாம் உங்களுக்காகத் தான் தேவன் இயேசு படைத்திருக்கிறார். மலர்களின் தேன் பருகும் பல வகையான அழகு வண்ணங்கள் கொண்ட பட்டாம்பூச்சிகளையும், தேவன் இயேசு தான் பறக்க வைத்திருக்கிறார்.



கண்ணீர் ஏன்? கலக்கம் ஏன்? நீங்கள் தேவன் இயேசுவுக்காகத் தான் வாழவேண்டும். மனிதர்களுக்காக அல்ல. இங்கு எல்லோரும் நல்லவர்கள் அல்ல. இது தான் உலகம். இயேசு உங்கள் அன்பு தகப்பன், அன்பு தாய். உங்களுக்காக சிலுவை சுமந்தவர், பாடுகளை சகித்தவர், ரத்தம் சிந்தியவர், உங்களை மகிழ்ச்சியாய் வாழ வைப்பது உறுதி. வானம், பூமி யாவும் உங்களுக்காகத் தான் (ஆதி 1:28).

## இந்த ஊழிய தேவைக்கான உங்கள் ஜெபம்

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் எல்லை ஒவ்வொரு மாதமும் விரிவாகிவருவதால், பணத் தேவை ஒவ்வொரு மாதமும் அதிகமாகிறது. ஒரு மாதத்திற்கு பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இத்தேவைகள் சந்திக்கப்பட மறக்காமல் நீங்கள் உங்கள் ஜெபத்தில் தாங்கும் படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தேவன் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

## உங்கள் நன்கொடை

நீங்கள் இவ்வூழியத்திற்கு நன்கொடை அனுப்ப விரும்பினால் இந்தியாவில் நீங்கள் எங்கு வசித்தாலும் கீழ்கண்ட வங்கிக் கிளைகளில் நேரடியாக பணத்தைச் செலுத்தலாம் அல்லது மணியார்டர், டி.டி. மூலமாக நன்கொடை அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| ICICI Bank | PEACE OF JESUS MINISTRY & TRUST<br>A.S.V. ROBIN | A/c No. 615201134411<br>A/c. No. 615201500867 |
| IDBI BANK | PEACE OF JESUS MINISTRY | A/c No. 006102000034441 |
| State Bank of India | A.S.V. ROBIN | A/c. No. 31682257041 |
| TMB Tamilnad Mercantile Bank Ltd | A.SOLOMON VICTOR ROBIN | A/c. No. 058100050303244 |
| Indian Overseas Bank | A.S.V. ROBIN | A/c. No. 010601000025999 |
| इंडियन बैंक Indian Bank | YESUVIN SAMADHANAM<br>A.S.V. ROBIN | A/c No. 725420502<br>A/c. No. 434465781 |

# கோவையில் வெளிப்பட்ட தேவன்இயேசுவின் மகிமை

## இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா

தேவாதி தேவன் இயேசுவின் பெரிதான இரக்கத்தினால், பல எதிர்ப்புகள், பிரச்சனைகள் மத்தியில் ஜனவரி 4,5 தேதிகளில், கோவை கைத்தறி மைதானத்தில், இயேசுவின் சமாதானம் பரவசப்பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. மைதானம் முழுவதும், வெளியேயும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த கூட்டம் மூலம் அளவில்லாமல் ஆசீர்வதிக்கப்பட்டு, அளவில்லாத பரவசம் அடைந்தனர்.

சகோ. ஏ.எஸ்.வி. ராபின், சகோ. பொற்செல்வி ராபின் தேவசெய்தி கொடுத்தனர். சகோ. ராஜ்லின்ட் ராபின் பாடிய என் இயேசு (பரவச பாடல்கள்) என்ற ஆடியோ சி.டி. தேவனுடைய கிருபையினால் ஜெபித்து வெளியிடப்பட்டது. சகோ. ராமராஜன், மக்கள் உள்ளத்தை தொடும்படி உலகம் முழுவதும் இருக்கும் ஒரே இறைவன் இயேசு என்று ஆணித்தரமாக கூறினார். மட்டுமல்ல கார் விபத்திற்கு பின் சுயநினைவில்லாமல் இருந்த அவரை இயேசு தான் சுகமாக்கினார் என்றார். சகோ. ஆனந்த்பாபு தன் வாழ்வில் தேவன் இயேசு செய்த அற்புதங்களையும், நன்மைகளையும் கூறி இயேசுவை மகிமைப்படுத்தினார். மட்டுமல்ல, தாவீதை போல நடனமாடி என்ற பாடலுக்கு நடனமாடி அனைவரையும் சந்தோஷப்படுத்தினார்.

சகோ. ஜி.எம். ஞானகுமார், இசையில் சகோ. ராஜ்லின்ட் ராபின், எழுதி, ராகம் அமைத்து பாடிய 4 சிறப்பு பாடல்களும் அனைவரின் உள்ளத்தையும், பரவசமடைய செய்தது. மேடையில் அவர் அருகே இடதுப் பக்கத்தில் இயேசு சிரித்த படியே நின்றதை பலர் பார்த்ததாக கூறினார்கள். இப்பாடல் மக்கள் உள்ளங்களை உருக்கியது. மட்டுமல்ல மக்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள்.

சகோதரி ஜரின் ஞானகுமார் பாடிய ஒருமுற ஒரே முற பாடலைக் கேட்டு மக்கள் மகிழ்ந்தனர். இப்பாடல் வந்திருந்த அனைவரின் உள்ளங்களையும் அசைத்தது. முதல் நாள் சகோ. பொற்செல்வி ராபின் கொடுத்த தேவ செய்தியின் மூலம் கர்த்தர் இயேசுவின் அன்பும், மனதுருக்கமும், வெளிப்பட்டு, மக்கள் கண்ணீர் வடித்தனர். ஆயிரக்கணக்கானோர் தேவன் இயேசுவுக்கு தங்களை ஒப்புக் கொடுத்தனர். பரிசுத்த ஆவியானவர் மக்கள் மேல் அளவில்லாமல் இறங்கினார். மக்கள் அற்புதங்களை பெற்று தேவன் இயேசுவை மகிமைப்படுத்தினார்கள்.

இரண்டாவது நாள் கூட்டத்தில் சகோ ஏ.எஸ்.வி. ராபின் கொடுத்த பாவம், நரகம், பரலோகம் குறித்த விழிப்புணர்வு செய்தி அனைவரின் உள்ளத்தையும் மாற்றியது. அநேகர் நித்திய வாழ்வு பற்றி அறிந்து, தங்கள் பாவங்களை அறிக்கை செய்து, பாவ மன்னிப்பையும், பரித்த ஆவியின் அபிஷேகத்தையும், அற்புதங்களையும் பெற்று தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

இரண்டு நாட்களும், கர்த்தருடைய பெரிதான கிருபையினால் மிக நேர்த்தியாய் கூட்டம் நடைபெற்று, கோவை நகரம், பெரிய எழுப்புதலை சந்திக்கும்படியாக தேவன் இயேசு தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். தேவாதி தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



**சகோ. ஜெயராஜ்**
**இயேசுவின் சமாதானம்**

### திரியேக தேவ

# இயேசுவின் சமாதான

## ஜனவரி 4,5 இடம் : கைத்த

**ராஜிலின்ட் ராபின்** பாடும்போது



வனுக்கே மகிமை

# ளம் பரவசப் பெருவிழா

## நறி மைதானம், கோவை

அருகில் ஏ.எஸ்.வி. ராபின்



# இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா

## இயேசுவின் கிருபையினால், இக்கூட்டத்தில் கலந்து சிறப்பித்தவர்களில் சிலர்



பாஸ்டர். சாம்பால் & சகோ. ஆனந்தகுமார்


பாஸ்டர். சாலமன் பிரேம்குமார்


பாஸ்டர். டேனியல்



சகோ. ஜோசப் பிரவீன் & ஜரின் சங்கீதா குடும்பம்


பாஸ்டர். பிரின்ஸ் தலியத்


பாஸ்டர் ஜெரால்டு


பாஸ்டர் சாம் ஸ்ரீதர்


ராஜ்லின்ட் ராபின்
ஏ.எஸ்.வி. ராபின்
பாஸ்டர். ஏசா


பாஸ்டர் சாம் சந்திரன்
இறுதி ஜெபம்


இக்கூட்டம் சிறப்பாய் நடைபெற ஒத்துழைத்த செயல்வீரர்களில் ஒருபகுதி

# இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா

இயேசுவின் கிருபையினால், இக்கூட்டத்தில் பாவம், சாபம், நோய், பில்லிசூனிய கட்டுகளிலிருந்து விடுதலைப்பெற்றவர்கள் மற்றும் தேவமகிமையினால் நிரப்பப்பட்டவர்களில் சிலர்.











இக் கூட்டத்தை மிகுந்த ஆசீர்வாதமாக நடத்தித்தந்த தேவாதி தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

- ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின், ராஜ்லின்ட் ராபின்

இயேசுவின் சமாதானம்

# இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா

**இயேசுவின் கிருபையினால், இக்கூட்டத்தில் சிறப்பு சாட்சிகள், செய்திகள், பாடல் பாடி மற்றும் ஜெபித்தவர்கள்**


ஏ.எஸ்.வி. ராபின்


பொற்செல்வி ராபின்


ஏ.எஸ்.வி.ராபின், ராமராஜன், ஆனந்த்பாபு, ராஜ்லின்ட் ராபின்


சகோ. ராமராஜனுக்கு ஏ.எஸ்.வி.ராபின் பரிசு அளித்த போது


ராஜ்லின்ட் ராபின், சகோ. ஆனந்த்பாபு, டேனியேல் (Photographer)


சகோ. ஆனந்த்பாபு சாட்சி சொல்லும் போது


சகோ. ஜி.எம். ஞானக்குமார்
(டிவைன் மெலடிஸ்)


ஜரின் ஞானக்குமார்

# இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா

இயேசுவின் கிருபையினால், இக்கூட்டத்தில் செய்தி மற்றும் ஜெபவேளையில் தொடப்பட்டு தங்களை ஒப்புக்கொடுத்தவர்களில் சிலர்



















வாலிபர் பகுதி

# சமாதான தூதர்

பொற்செல்வி ராபின்

பரிசுத்த தேவன் இயேசுவின் இனிய பெயரால் உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவாதி தேவனுக்கே மகிமை !

## தூதர்கள் வாழ்த்து

ராஜாதி ராஜா இயேசு கிறிஸ்து இஸ்ரவேல் தேசத்தில் பெத்லேகேம் ஊரில் மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார். அப்பொழுது பரலோகத்திலிருந்து திரளான தேவ தூதர்களின் கூட்டமே அந்த இடத்திற்கு இறங்கி வந்து இயேசுவை வாழ்த்தி, மகிமைப்படுத்தினார்கள். மட்டுமல்ல உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி இவர்கள் தேவனைத் துதித்தார்கள். பாவமும், அக்கிரமமும் செய்து தேவனை விட்டு தூரம் போன உலக மனிதர்களை தேவனுக்கு பிரியமானவர்களாக மாற்றி, உலகில் சமாதானம் உண்டுபண்ண தேவன், ரத்தமும், சதையுமாக இயேசு என்ற பெயரில் மனிதராக பிறந்தார்.

## தூதர்களின் கடமை

இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களின் நிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு (உதவி செய்யும்படி) அவர்கள் எல்லோரும் அனுப்பபடும் பணிவிடை ஆவிகளாய் இருக்கிறார்கள் என்று எபிரெயர் 1. 14 ம் வசனம் கூறுகிறது. மனிதர்களாகிய நம்மை பாதுகாக்கும்படியாக இந்த தேவ தூதர்களை தேவன் இயேசு பரலோகத்திலிருந்து தினந்தோறும் அனுப்புகிறார் (சங்கீதம்91:11). ஜெபமும், துதியும் இருக்கும் இடத்தில் இவர்கள் இருப்பார்கள் இவர்களை நாம் வணங்கக் கூடாது, தேவனை மட்டுமே வணங்க வேண்டும். தம்முடைய தூதர்களை காற்றுகளாக... மாற்றுகிறார். (சங் 104 : 4 ) காற்றின் வேகத்தை போல மிக மிக வேகமாக இவர்கள் இறங்கி வரக்கூடியவர்கள். நான் 2 வகையான தேவதூதர்களை பார்த்திருக்கிறேன். இறக்கைகளை அடித்து இறங்கி, வருபவர்கள். இன்னொரு வகை. தங்க ஏணியில் இறங்கி வருபவர்கள் மிக அழகானவர்கள். மிகாவேல் எதிர்த்து நின்று போராடுபவன். இப்படி போரிட்டு சாத்தானை நமக்காக வீழ்த்துபவன். தேவாதி தேவன் இயேசு கட்டளை கொடுத்ததும், மிகாவேல் தூதன் சாத்தானின் கூட்டத்தை முறியடிக்கக் கூடியவன். இப்படி நாம் நம் ஜெபத்தினாலும், துதியினாலும் சாத்தான் கொண்டு வரும் கொடூரமான ஆபத்துகளிலிருந்து தப்ப முடிகிறது.

ஊட்டி மலையின் மிகக் குறுகலான சாலையாகிய கொண்டை ஊசி வளைவில் காரில் நாங்கள் குடும்பமாய் வந்த போது ஓவர் டேக் செய்ய வந்த காரின் காரணமாக, எங்களுக்கு தேவன் தந்த மாருதி 800 காரை என் கணவர் உடன் பிரேக் போட்டார்கள். அது உயரே எழும்பியது. கிழே ஆயிரக்கணக்கான அடி ஆழமான, பயங்கரமான பள்ளதாக்கு. இயேசுவே என்று நாங்கள் கூப்பிட்டதும், ஒரு பெரிய, உயரமான தேவதூதன் எங்கள் காரை கைகளால் அப்படியே பிடித்து நிறுத்தியதை என் கண்களால் கண்டு, கர்த்தர் இயேசுவுக்கு மனதார நன்றி சொல்லி துதித்தேன்.



## காபிரியேல் தூதன்

மரியாளிடம் வந்து, தேவ ஆவி உன் வயிற்றில் இறங்கி உருவாகி, அவர் இயேசுவாக பிறப்பார் என்று கூறினவர் இந்த காபிரியேல் தூதன். இவர் தானியேலின் உபவாச ஜெபத்திற்கு தேவன் இயேசு பதில் தரும்படி தானியேலிடம் அனுப்பப்பட்டவர், காபிரியேல் தூதன். தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட செய்தியாக, வரப்போகும் உலகத்தின் அழிவைப் பற்றியும், இந்த கடைசி காலத்தில் நிகழும் உலகத்தைப் பாழாக்கும் அருவருப்பான விபச்சாரத்தையும் தேவன் சொன்னபடியே இவர் தானியேலிடம் முன்னறிவித்தார்.

## சமாதான தூதர்

அன்புத் தம்பி, தங்கையே, நீயும் இந்த காபிரியேல் தூதரைப் போல சமாதானத்தின் நற்செய்தியாகிய பைபிள் வசனங்களை, உலக மக்களுக்கு போதிக்கலாமே?. இயேசு தரும் பாவ மன்னிப்பையும், அவருடைய ரகசிய வருகையையும் மக்களுக்கு அறிவிக்கலாமே?. தேவனுக்கும் உலக மக்களுக்கும் இடையே சமாதான தூதராக மாறி மக்களுக்காக உபவாசித்து, பிரார்த்தனை ஏறெடுக்கலாமே ? மிகாவேல் தூதனைப் போல பொல்லாத சாத்தான் என்ற பிசாசை எதிர்க்க உபவாசத்தோடும், தினந்தோறும் அதிகாலை ஜெபத்தோடும், வேத வாசிப்போடும், துதிகளோடும் தேவ சமூகத்தில் காத்திருக்கலாமே? காத்திருந்து வல்லமையை, அதிகாரத்தை பெற்று சாத்தானின் பிடியில் சிக்கிய மக்களை தேவன் இயேசுவின் பெயரால் கட்டவிழ்க்கலாமே? குடும்பங்களை கண்ணீர் வடிக்க வைக்கும் பிசாசின், வியாதியின், மரணத்தின், மனக்குழப்பத்தின் கட்டுகளை, குடி, போதை பழக்கத்தின், பாவத்தின், பில்லி, சூன்யம், செய்வினை கட்டுகளை அறுத்து மக்களை விடுவிக்கலாமே? இன்றே இதை செய், நாளை அல்ல. இன்று உடனே அதை செய். இயேசு உன்னை ஆசீர்வதிப்பார்.



தொடர் - 102

ஆயுத்தப்படுங்கள், ஆயுத்தப்படுத்துங்கள்

# இயேசுவின் ரகசிய வருகை

– பொற்செல்வி ராபின்

# நரகம் வேண்டவே வேண்டாம்



## இரண்டாம் மரணம்

...சூனியக்காரரும், விக்கிரக ஆராதனைக்காரரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் , கந்தகமும் எரிகிற கடலில் பங்கடைவார்கள். (வெளி 21:8) என்று வாசிக்கிறோம். மந்திரவாதிகள் (witchcraft), சூனியக்காரிகள் சூனியக்காரர்கள், (The Vile), வசியம் செய்வோர். (hypnotism), மாய வித்தை காட்டுவோர் (magic), தியானம், யோகா பயிற்சி செய்வோர், அசுத்த ஆவிகளோடு பேசுவோர் (media) போன்ற சாத்தானின் செயல்களை செய்வோர், சாத்தான் சபையை சேர்ந்தோர். சாத்தானை ஆராதிக்கிறார்கள். அவனுக்கு அடிமைகளாய் வாழ்கிறர்கள். அக்கினிக் கடலில் தேவன் இயேசு போட்டு தண்டிக்கும் தண்டனை இவர்களுக்கு கொடுக்கப்படும். இது இரண்டாம் மரணம். உலகில் இறப்பது முதலாம் மரணம்.

## நரகத்தில் தண்டனை

இவ்வுலகில் வாழும் போது சாத்தானின் இந்த தீய செயல்களை செய்து மனிதர்களை துன்பப்படுத்துவோர், கொலை செய்வோர், சட்டத்தின் பிடியிலிருந்து தப்பலாம். ஆனால் நீதி தேவன் இயேசுவின் பிடியிலிருந்து தப்பவே முடியாது. இவர்களுக்கு திடீர் மரணத்தை கொடுப்பார். உடனே நரகத்தீயில் தள்ளி தண்டிப்பார். இவர்கள் நரகத்தில் அக்கினி சேற்றில் அமிழ்த்தப்பட்டு, தீயின் வேதனையால் துடிதுடித்து ஓயாமல் அலறுவார்கள். அங்கும் ஓய்வே இல்லாமல் மந்திரம் ஓதுவார்கள். மாயவித்தை செய்வார்கள். பிசாசுகள் கூடி வந்து இவர்களை இரும்பு சங்கிலிகளால் அடித்து பல கொடுமைகள் செய்கின்றன. இப்படி தண்ணீர் கிடைக்காமல் நாவு வறண்டு, பசியினால் வாடி துடி, துடித்து இவர்கள் கதறிக் கொண்டே இருப்பார்கள். மனிதர்களை வேதனைப்படுத்த, நஷ்டப்படுத்த, கொலை செய்ய மந்திரவாதிகளிடம், சூன்யக்காரர்களிடம் சென்று பணம் கொடுத்து மந்திரம், பில்லி, சூன்யம் செய்பவர்களுக்கும் இதே தண்டனைதான் நரகத்தில் நான் கொடுப்பேன் என்று எழுது என்கிறார் தேவாதி தேவன் இயேசு.

## இவர்களின் பாடுகள்

தேவன் இயேசுவை அதிகமாய் தேடி, ஜெபித்து நல்லவராய் வாழ்பவரை, ஏவப்பட்டு வரும் பில்லி சூன்ய மந்திர ஆவிகள் தாக்க முடியாது. அவர்களை சுற்றிலும் தேவன் இயேசுவின் அக்கினி சூழ்ந்திருக்கும். இயேசுவின் அக்கினி மகிமையை பார்த்து, பயந்து, இந்த பிசாசுகள் மீண்டும் மந்திரவாதியிடம், சூன்யக்காரரிடம் திரும்பி செல்கின்றன. இவை உன் ரத்தத்தை தா அல்லது உன் பிள்ளையின் ரத்தத்தை தா, நாங்கள் குடிக்க வேண்டும் என்று கூறி பயங்கரமான சூழ்நிலையை இவர்களுக்கு உருவாக்குகினறன. சிலர் இந்த பேய்கள் தாக்கி இறந்து விடுகின்றனர். உடனே தேவனால் நரகத்தில் தள்ளப்படுகின்றனர்.

தொடரும்.



பரவச நேரம்

தமிழன் டி.வி.யில்

இமயம் டி.வி.யில்

IMAYAM

காலை 7.15

பிப்ரவரி 10 24 திங்கள்

ஒவ்வொரு 2வது, 4வது திங்கட்கிழமைகளிலும்

ஒவ்வொரு 2வது, 4வது செவ்வாய்க்கிழமைகளிலும்

பிப்ரவரி 11 25 செவ்வாய்



JB HOMES

# Build your Home !....

# Like your Dreams !...

# ஜே.பி. ஹோம்ஸ்-ன் முதல் படைப்பு

கற்பகம் காலேஜ் அருகில், கோயமுத்தூர்.

JENIFER NAGAR

150 VILLAS

DTP

## அப்ரூவ்டு வீட்டுமனைகள்

1. யூகோ வங்கியில் 80% கடன் ஏற்பாடு செய்து தரப்படும்.
2. மனையிடங்களை பார்வையிட வாகன வசதி உள்ளது.
3. கோவை – பொள்ளாச்சி மெயின் ரோடு
4. மனையை சுற்றிலும் பாதுகாப்பு 24 மணி நேரமும்
5. சோலார் மின் விளக்குகள்
6. பைபாஸ் – 3 கி.மீ.
7. கற்பகம் மருத்துவக்கல்லூரி மிக அருகில்




BOOKINGS OPEN NOW

DON'T MISS IT

0422 2523370

தொடர்பு முகவரி :

**JB HOMES AND PROPERTY DEVELOPERS PVT LTD.**

No.3, R.R. Layout, New Sidhaputhur, Coimbatore - 641 044.
Email id : jbpropertydeveloperspvtltd@gmail.com

எங்களது வங்கி : யூகோ வங்கி, ரேஸ்கோர்ஸ், கோவை – 18.

Registered with Registrar of News Paper for India
RNI / TNTAM / 14783 / 2002

Postal Regsitration No. CB / 001 / 2012 - 2014
தனிப்பிரதி ரூ. 4/- ஆண்டு சந்தா - ரூ. 40/-




Owned & Published By A.S.V. ROBIN Managing Trustee on behalf of Peace of Jesus Ministry & Trust 393, Phase - 2, Housing Unit, Sidco, Coimbatore - 641 021. and Printed at Angel Print Systems, 818-Main Sathy Road, Coimbatore - 641 012. India Editor : A.S.V. ROBIN